REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 156

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரு. 24—0—0
6 மாதம் ரு. 12—0—0
3 மாதம் ரு. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரு. 30—0—0
6 மாதம் ரு. 15—0—0
3 மாதம் ரு. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சென்னை: கார்த்திகை 27உ சனி (12—12—53) ★ ★ ★ வெளியூர்: கார்த்திகை 28உ ஞாயிறு (13—12—53)

'சி. ஆர். வண்டி அதிக நாள் ஓடாது!'

—[o]—

"அதிகார வெறியால் இன்று காட்சியளிக்கிறார்!"

"பதவியில் இருக்கப் பிடிவாதமாக அடம் பிடிக்கிறார்!"

'எந்த ஜனநாயக நாட்டிலுமே இத்தகு அவமரியாதை கா. சட்டசபை உறுப்பினர்களுக்கு உண்டானதில்லை'

பற்றற்றவர் என அவரை சிறப்பித்தது வெறும் மனப்பிராந்தியே!

'சுதந்தரா' ஆங்கில வார இதழ் படப்பிடிப்பு

"இராஜகோபாலாச்சாரியாரின் இந்தத் தகுதிக்கு, எந்த அருங் குணங்கள் காரணமாக இருந்தனவோ! அந்த அருங் குணங்களை அவர் இழந்துவிட்டார். அவருக்கு இருந்த—அல்லது இருந்ததாக நினைக்கும்படியாய் இருந்த பற்றற்ற தன்மைதான், அவருடைய உயர்வுக்குக் காரணமாகும்."

"லௌகீக விஷயங்களில், துளிகூட கவலைப்படாமல் இருந்ததையும், கலாசார—தார்மீக சிந்தனைகளில் அவர் ஊறி இருந்ததைப் போல் தோன்றியதையும் கண்டு, கவர்ச்சியுற்று, இந்த மாகாணத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்த முன் வரும்படி—சென்னை சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியினர், அவரைக் கேட்டுக் கொண்டார்கள். அவரிடமிருந்த அந்தக் கவர்ச்சி, இப்போது எங்கேயோ போய்விட்டது."

"முந்திய ரூபத்தில், 'பக்தி மார்க்கத்தில்' திளைத்து நின்ற இந்தப் 'புனித ஆத்மா', ஜனநாயக ஆட்சியில் போற்றிப் பேண வேண்டிய சாதாரண, பரஸ்பர மரியாதைகளைக்கூட காட்டத் திறமையும் பண்பும் இல்லாத அதிகார வெறியராய் இன்று காட்சியளிக்கிறார்."

"எந்த ஜனநாயக நாட்டிலுமே மந்திரிகளும், சட்டசபை உறுப்பினர்களும்—ஆச்சாரியாரிடம் சென்னை மந்திரிகளும், சட்ட சபை உறுப்பினர்களும் பெறுவதைப்போன்ற அவமரியாதைகளைப் பெற்றதில்லை!"

—இந்தப் படப்பிடிப்பு, தோழர் சுப்பாராவை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'சுதந்திரா' என்ற ஆங்கில வார இதழிலிருந்து, எடுக்கப்பட்டு, இங்கு அப்படியே தரப்பட்டுள்ளது.

"தனக்கு வால்பிடித்து நிற்கும் பக்தகோடிகளின் வேண்டுகோளுக்காக, தனக்குக் கிடைத்துள்ள பதவியை குரங்குப் பிடியாக அவர் பிடித்துக் கொண்டிருப்பதோடு, விவரங்கெட்ட பேர்வழியைப் போல, தானே பதவியில் இருக்க பிடிவாதமாக அடம் பிடிக்கிறார்."

"இன்ப துன்பங்கள் நிறைந்த இந்த உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு, 'இறைவனின்' புனிதமான நேர உபதேசங்களில் திளைத்து நின்றவரை, அவருக்கு ஒவ்வாத லௌகீக விஷயங்களில் மற்றவர்கள் இழுத்து விட்ட காட்சி இப்பொழுது எங்கோ மறைந்தே, மறந்தே போய்விட்டது."

"தன்னுடைய சகாக்களாக

(3-ம் பக்கம் பார்க்கவும்)

மில் முதலாளி போலீசில் சரண்

பம்பாய், டிச. 10—

நகர் ஒருவரின் கொலை சம்பந்தமாக தேடப்படுகின்ற மில் முதலாளியான தனபிரசாத்தை இம்மாதம் 24-ம் தேதி வரை ரிமாண்டில் வைக்க மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். முன்பு ஒரு நாளின்றேட்டால் இவர் ஜாமீனில் வெளிவிடப்பட்டிருந்தார். பம்பாய் ஹைகோர்ட் அவ்வுத்தரவை ரத்து செய்துவிட்டது. எனவே, அந்த முதலாளி நேற்று போலீசாரிடம் சரணடைந்தார்.

மறுபடியும் அந்த அற்புதக் கன்னி?

— (:) —

மீண்டும் உண்ணுவதில்லை, இளைப்பதில்லை என்ற புரளி

இம்முறை டெல்லிக்கு யாத்திரை செல்லுகிறார் 'பிராட்' லட்சுமி!

புதுடெல்லி, டிச. 11—

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மீண்டும் மருத்துவப் பரிசோதனைக்காக, உண்ணாமல் உயிர்வாழும் குட்டு 'அற்புதக் கன்னி' டெல்லிக்கு அழைத்துச் செல்லப்படுவார் என்று தெரிகிறது.

அப்பகுதியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினரான என். சோமண்ணா என்பவர், யூனியன் சர்க்காரின் சுகாதார மந்திரியுடன், இதுபற்றித் தாம் கடிதப் போக்கு நடத்தி வருவதாகவும், ஏற்கனவே தம்முடைய யோசனையின்படிதான் அந்த 'மாயக் கன்னி'யை மருத்துவச் சோதனை செய்ய மத்திய சர்க்கார் பணம் ஒதுக்கினதாகவும் அவர் கூறியுள்ளார்.

'மாயக்கன்னி' மற்றவர்களைப் போல்தான் உண்பதாகவும், சாதாரணமாக உயிர் வாழ்வதாகவும் பெங்களூர் டாக்டர்கள் உறுதிப்படுத்தி, அவர் குறிப்பிடும் போது, பெங்களூர் டாக்டர்கள் அப்பெண்ணும் சாப்பிடவும் மற்றவர்கள்போல் வாழவும் செய்ய முயற்சித்திருக்கிறார்களே ஒழிய, அதுவரை எப்படி அப்பெண் சாப்பிடாமல் உற்சாகத்தோடு இருந்து வந்தது என்பதை கண்டறிய முயற்சிக்கவில்லை என்றும் கூறினார்.

மீண்டும் அந்தப் பெண் உண்ணாமல் இருக்கிறாளா என்றும், இதற்குத் தாம் உத்திரவாதம் என்றும் என். சோமண்ணா குறிப்பிட்டுள்ளார்.

ஒரு ரூபாய்க்கு 100 தம்பிடி!

அடுத்த ஆண்டு நடைமுறைக்கு வரும்!

கராச்சி, டிச 11—

அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல் தேதி முதல் 1 ரூபாய்க்கு 100 தம்பிடி என்ற செலாவணி மாற்றம் பாகிஸ்தானில் நடைமுறைக்கு வர இருக்கிறது. இந்த மாறுதலை அனுசரித்து, புதிதாக நாணயங்கள் அச்சிட்டு வெளியிடப்போவதில்லை. இப்பொழுது உள்ள தம்பிடி 25-க்கு ¼ ரூபாயும், 50-க்கு ½ ரூபாயும் என்று, அமுலுக்கு வரும் தேதி முதல் கணக்கிடப்படும். புதிதாக 10 தம்பிடியைக் குறிக்கும் ஒரே நாணயம் மட்டும் அச்சடித்து வெளியிடப்படும்.

டாக்டர் ஜகன்

இலங்கை செல்ல அனுமதி இல்லை

கொழும்பு; டிச 11—

பிரிட்டிஷ் சர்க்காரின் ஏதேச்சாதிகாரத்தின் விளைவாக, மனைவி இழந்து சென்னை வந்துள்ள டாக்டர் செட்டி ஜகனுக்கு சிலோன் செல்ல அனுமதி, இலங்கை சர்க்காரால் மறுக்கப்பட்டுவிட்டது.

தி. மு. கழகம் அழிந்தாலும் அதன் கொள்கை வெற்றி பெற்றே தீரும்'

'ஒரே நாளில் தம்முயிரையும் இழக்கத் துணிந்து ஐயாயிரவர் சிறை புகுந்தனர்'

'தீர்த்துக் கட்டப்பட இருப்பது சி. ஆர். அதிகாரமா? தி. மு. கழகமா?'

'வகுப்புரிமை பேசிய காரணத்தால்தான் சிவசண்முகம் சபாநாயகராக இருக்கிறார்'

தி. மு. கழகத் துணைச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொல்மாரி

"செல்ல வேண்டிய தூரம் எவ்வளவு?—அறிகிறோம்; வந்திருக்கிற தூரம் எவ்வளவு?—அறிகிறோம். தி.மு கழகம் அடைந்துள்ள கஷ்ட நஷ்டங்கள் என்ன? — கணக்கிட்டேதான் பார்க்கிறோம்; தூர்க்கப்பட வேண்டிய பள்ளங்கள், செப்பனிடப்பட வேண்டிய பாதை, விரட்டப்பட வேண்டிய கபவஞ்சகர்கள் ஏராளம், ஏராளம் என்பதையும் உணர்கிறோம். என்றாலும், அண்ணா சொன்னால், அவர் கட்டளை இட்டால், 'அதற்காக நீ எங்களை வாட்டினாலும், வதைத்தாலும், கண்ணை இழக்கச் செய்தாலும், கை காலை ஒடித்தாலும், உராய்ப்புகளைச் சிதைத்தாலும் நாங்கள் சிறைச் செல்லத் தயார்' என்பதை, ஜூலை 15-ல், ஒரே போராட்டத்தில், ஒரே நாளில், 5000 தோழர்கள் சிறை புகுந்து உறுதிப்படுத்தி விட்டனர்."

"ஐவரே அழிந்தாலும், ஏன், அண்ணாவே அழிந்தாலும், அதன் கடைசித் தொண்டன் அழிந்தாலும், தி. மு. கழகம் என்ற பெயரே அழிந்தாலும்கூட, தி. மு. கழகம் எந்தக் கொள்கையைப் பரப்பி வந்ததோ, அது வெற்றி பெற்றே தீரும்! தீரும்!! தீரும்!!!"

"ஆச்சாரியார், தன்னை ஒரு இராசுத் தட்டிலேயும், ஒரே நாளில் 5 000 பேர் சிறைபுகும் அளவுக்கு வலிமையும், வளமும், உணர்ச்சியும், ஊக்கமும் கொண்டுள்ள தி. மு. கழகத்தை இன்னொரு தட்டிலேயும் வைத்து எடைபோட்டுக் கூறுகிறார்—'நான், தி. மு. கழகத்தை ஒழித்துக் கட்டிவிடுவேன்; தீர்த்துக் கட்டுங்கள்'—என்று! தீர்த்துக் கட்டப்படப்போவது, அவருடைய அதிகாரமா? அல்லது தி. மு. கழகமா? என்று அரசியல் நேர்மை, நாணயம் கொண்டுள்ள காங்கிரஸ் நண்பர்களே கூறட்டும்."

"அண்மையில், காஞ்சிபுரத்திலே இராமநாதபுரம் இராஜா பேசுகையில் சொன்னார்—'முதல மந்திரி ஆச்சாரியார் என்ன தப்பு செய்தார்? ஏன் அவரை விரட்டுகிறீர்கள்? இன்ன 'தவறு' செய்தார் என்று நீங்கள் விளக்கினால், நாங்கள் உங்களுக்குத் தலை வணங்குகிறோம்" என்றார். அவருக்குக் கூறுகிறேன்—ஆச்சாரியார் இன்று சட்டசபையில் ஜனநாயகத்திற்குப் புறம்பாக அமர்ந்திருப்பதே தவறு தானே! எம். எல். ஏ.-க்கள் என்ற 375 வாயிற்படிகளைத் தாண்டி வராமல், தேர்தலில் நிற்காமல், மக்களிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பை விரும்பாமல் அல்லது வசதியில்லாமல்,

(3-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 12—12—1953 சனி

பழனி பஞ்சாமிர்தம்!

அமைச்சர் ஆச்சாரியாரின் ஆட்சியைப் பார்ப்பன மக்களில் சிலர் நீங்கலாக மற்றவர்கள் வெறுக்கிறார்கள் என்பது வெள்ளிடைமலை. அவர் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தப்பட்டதே, மக்களாட்சி அறநெறியை பலி கொடுத்துத்தான் என்பதை அனைவரும் அறிவர். அவர் அமைச்சராக்கப்பட்ட அன்று முதலே திராவிடத்தில் இருள் சூழ்ந்து கொண்டது என்பதை, அவருடைய சுய ஜாதி ஏடுகள்—வேறு இரண்டொரு ஏடுகள் நீங்கலாக மற்றவர்களால் மனந் துணிந்து மறுக்க முடியாத உண்மைகளாகும்.

அவர், பதவியேற்ற அந்தக் கணமே, மக்களாட்சி முறையின் புனிதத்தை நாசப்படுத்திச் சித்திரவதை செய்து கொல்லும் தூய பணியினை மேற்கொண்டார். தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் குழிதோண்டிப் புதைத்து விடுமாறு, பகட்டான அமைச்சர் பதவியைக் காட்டி, பணம் ஒழிய ஜனநாயக அடிப்படையைத் தகர்த்தெறியும் அக்கிரமத்தைப் பிறர் புரியும்படித் தூண்டினார்—வெற்றியும் பெற்றார். எப்படியாவது அமைச்சர் பதவி கிடைத்தால் போதும் என்பதற்காக, எந்தக் கேடுகளையும் கண்டிப்பாகச் செய்தேனும் பதவி பரிசு பெறுவது என்று முன்கூட்டியே சங்கல்பம் செய்துகொண்டிருந்தவர்களுக்கு ஆச்சாரியாரின் தூபமும், தூபபோதனையும், பதவி ஆசையும், சிறந்ததோர் வாய்ப்பாகப் போய்விட்டது.

'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்' என்பதற்கொப்பவும், 'நாளை வரும் பலாப் பழத்தைவிட இன்று கிடைக்கும் களாப் பழம் மேல்' என்ற கருத்திலும், முறையோடு கிடைத்தால் என்ன முறை கெட்டுக் கிடைத்தால் என்ன, பணம் பணந்தானே—பதவி பதவிதானே என்ற வெறுக்கத்தக்க நினைப்பாலும், ஆச்சாரியார் விரித்த பதவி வலையில் அறிந்தே நடந்து சென்றனர். காங்கிரஸ் ஆட்சி நிலைபெற்றது. ஜனநாயக தர்மத்தைக் கொலை செய்து, அமைச்சர் ஆச்சாரியார் பெற்ற வெற்றி, காங்கிரஸ் ஆட்சியின் இந்த அதர்ம வெற்றி, ஆச்சாரியாருக்கு உள்ளதாகச் சொல்லப்படும் அபார அறிவாற்றலுக்கோ, அரசியல் அறவொழுக்க சீலத்திற்கோ, கிடைத்த வெற்றியாக, ஒருக்காலும் இருக்க முடியவே முடியாது. பின், என்னவோ எனில், எந்த அக்கிரமத்தையும் மனந் துணிந்து செய்யும் ஆச்சாரியாரின் அறத்தின் நீங்கிய அரக்கத் தன்மைக்குத் தக்கதோர் சன்மானமே ஆகும்.

இது ஆச்சாரியாரின் முதல் வெற்றி! 'பஸ்ட் பிரமோஷன்!'

அமைச்சர் ஆச்சாரியாருக்கு உள்ள 'ஜாதித் துவேஷ'மும், அதை வழித்துணையாகக் கொண்டு தமது ஆட்சியில் அவர் புகுத்திய நடைமுறையும், காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் விஷயத்தில் அவர் காட்டிவரும் அலட்சிய அவமரியாதை புத்தியும், எதிலும் தமக்கே ஆற்றலும் அறிவும் உண்டு என்று நடந்துகொள்ளும் அவருடைய அகம்பாவ இழிநிலையும், காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களை, அவர் மீது ஆத்திரம் கொள்ளச் செய்தது.

ஆனால், தமது பதவிக்கு ஆபத்து இப்பொழுதைக்குக் கிடையாது என்பது உறுதியானதும், தமது அதிகாரத்துக்கு காஷ்மீர் பண்டிதர் உயிர் பிச்சைக் கொடுத்துவிட்ட பின்னரும், அமைச்சர் ஆச்சாரியார் பேசத் தொடங்கிவிட்டார் 'காங்கிரசின் கண்ணியம்—கட்டுப்பாடு—தலைவர்கள் கூடிவிடும் வித்தை' ஆகியவைகளை எல்லாம்!

தம்மை ஆதரித்து, எதிர்த்துக் காங்கிரஸ் கட்சியினரை வாயில் வந்தபடி எல்லாம், வசை பாடி பயிற்சி பெற்று வந்துள்ளவர்கள், இனி மேற்கொள்ள வேண்டிய பணியையும், கனம் ஆச்சாரியார் சுட்டிக் காட்டுகிறார் 'அதோ திராவிட இயக்கம்! ஆரம்பியுங்கள் உங்கள் வேலையை!' என்று அவர் தம் வளர்ப்புகளை உசுப்பிவிடுகிறார். தமமுடைய வசவுப் படையை அவர் கலைத்து விடவில்லை; அதில் அவருக்கு விருப்பமும் இல்லை. இலக்கை மட்டும் மாற்றிக் கொள்ளச் சொல்லுகிறார்!

ஆச்சாரியாருக்கு இப்பொழுது கிடைத்திருப்பது 'டபிள் பிரமோஷன்!'

எனவே, பளித்த 'பஞ்சாமிர்த'த்தை, அது பிறந்த இடமான பழனியிலிருந்து நமக்கு அனுப்பி வைக்கிறார். வரவேற்கிறோம்!

நமது சுழிவுக் கூடையில் அந்தப் பிரசாதத்திற்கு எப்பொழுதும் இடம் இருக்கிறது என்பதை, அவருக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம்.

ஒரு குரங்கு கள்ளைக் குடித்து விட்டதாம்! அதைத் தேளும் கொட்டியதாம்! அதற்கு மேல், பேயும் பற்றியதாம்! குரங்கின் குதிப்பைச் சொல்லவா வேண்டும்! காட்சி கண்காட்சியே!

வழியிலே கிடந்த கோடாலியைக் காலிலே தூக்கிப் போட்டுக்கொண்டு, குய்யோ முறையோ என்று கத்திக

முக்கிய அறிவிப்பு

'நம் நாடு' தனி இதழ்!

★

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர் களின் அறிக்கையுடன் 'நம் நாடு' தனி இதழ் அரையணா விலையில், நாளை காலை வெளிவரும்.

சென்னைக்கு ஞாயிறு காலையிலும், வெளியூர்களுக்கு திங்கட்கிழமையும் கிடைக்கப் பெறும்.

★

ஏஜெண்டுத் தோழர்கட்கு!

நாளை (ஞாயிறு) வெளியிடப்பெறும் மேற்படி தனி இதழ் எல்லா வெளியூர் ஏஜெண்டுத் தோழர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். திங்கட்கிழமையன்று தவறாது பார்சலைப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

—பொறுப்பாளர்.

கராச்சி, டிச 9—

பாகிஸ்தான் அருகிலுள்ள சேர்ந்த ஈராணுக்கு வடக்கே தரகாடபுக் குறைவாக உள்ள ஈராணுக்கு பக்கபலமாக இருக்குமென்று, அதைத் தாக்க அரசினர் துணியமாட்டார்கள் என்றும் நிகழுடன் வந்துள்ள யுவன் நிருபரிடம் பாக. பிரதமர் சொன்னார்.

பதவியை உயிர்ப்பித்துக் கொள்ள 800 சிப்பாய்கள் மறுப்பு

அவர்களை வேலையிலிருந்து சர்க்கார் விலக்கியது!

பம்பாய், டிச 11—

இந்த ஆண்டு நவம்பர் 30-ந் தேதியோடு கோவாவில் உள்ள உள்நாட்டுச் சிப்பாய்களான 800 பேர்களின் பதவிகாலம் காலாவதியாகி விட்டது. மேற்கொண்டு ஐந்து ஆண்டுகளுக்கு சிப்பாய்களாக இருக்கிறோம் என்று பதிவு செய்துகொள்ள வேண்டுமோம. அவர்கள் அவ்வாறு பதிவு செய்துகொள்வதை விரும்பாது கோவா சர்க்கார் கோரிக்கையை மறுத்துவிட்டனர் என்றும், எனவே, அவர்களுடைய ராணுவம் சர்க்காரால் கலைக்கப்பட்டுவிட்டது என்றும், கோவா மக்கள் கட்சி முக்கியஸ்தர் அறிவித்தனர்.

நிலமில்லாதோருக்கு நிலம்!

விரைவில் கிடைக்குமென அமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, டிச 9—

இந்திய சர்க்கார் உணவு விவசாய இலாகா போட்டுள்ள திட்டம் அமுல் நடத்தப்படுமானால் இந்தியாவிலுள்ள நிலமில்லாத விவசாயிகளில் பாதி பேர்களுக்கு (சுமார் 1½ கோடி பேர்) நிலம் கிடைத்துவிடும் என்று இந்திய சர்க்கார் உதவி உணவு மந்திரி கூறியுள்ளார்.

இந்திய சர்க்கார், நிலமில்லாத விவசாயிகளுக்குத் தருவதற்காக 10,000 ஏகரா தரிசு நிலங்களை ஒதுக்க முடியுமா என்று மாநில சர்க்கார்களைக் கேட்டிருக்கிறது.

ஒரு மாநிலத்திலிருந்து கிடைக்கும் நிலங்களில் பாதி, அந்த மாநிலத்திலுள்ள நிலமில்லாதவர்களுக்குப் பகிர்ந்து தரப்படும்; மற்ற பாதி, வெளி ராஜ்யங்களைச் சேர்ந்த நிலமில்லாதவர்களுக்குத் தரப்படும். 10,000 ஏகராக்களில் சுமார் 1000 குடும்பங்களை குடியேறச் செய்யலாம்.

அவருக்கும் அவருக்கும் பூசல் இல்லையாம்!

காமராசருக்கு நிந்தாஸ்துதி பாடுகிறார் ஆச்சாரியார்

உடுமலைப்பேட்டை, டிச. 10—

"எனக்கும், காமராச நாடாருக்கும் காங்கிரசின் கௌரவம்தான் எல்லாவற்றையும் விட முக்கியம்; இந்த விஷயத்தில் சிலர் கற்பனை செய்து கொண்டிருப்பது போல, எங்களுக்கு இடையில் கருத்து வேறுபாடே இல்லை"

—என உடுமலைப் பேட்டையில் மாதர் காங்கிரஸ் உறுப்பினர்கள் அடங்கிய கூட்டமொன்றில் அமைச்சர் ஆச்சாரியார் கூறினார். தொடர்ந்து அவர் பேசியதாவது:

"காங்கிரசின் கௌரவத்தையே காமராசர் எல்லாவற்றையும் விட பெரியதாகக் கருதுகிறார். [illegible]

[illegible]"

"உடுமலைப்பேட்டையில் காங்கிரசார்கள் [illegible]"

"[illegible]"

அமைச்சர் [illegible] அவர் கூறியதாவது:

"சென்னை மாநிலத்தில் இப்போது [illegible] இல்லை," என்றார்.

கண்ணைக் கசக்கினவன் கதைபோல, காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒப்பாரி வைக்க ஆரம்பித்தனர்.

ஆத்திரம் பிறந்தது; ஆச்சாரியாரையும் அதிகாரத்தை விட்டுப் பிரிந்து எறிந்துவிடுவது என்ற திட்டம் கருவாகி உருவாகிக் கொண்டிருந்தது. இதைத் தெரிந்த ஆச்சாரியார், சட்டசபை உறுப்பினர் கூட்டத்தைக் கூட்ட வேண்டாம் என்றும், தலைவர் தேர்தலுக்கு இச்சூழ்நிலையில் அவசியமில்லை என்றும் நேரு கூறிவிட்டார் என்று, தம்பட்டம் அடிக்க முதல் முதலாகக் கிளம்பினார்.

கர்ப்பத்திலே இருந்த குழவியைக் கருவிலேயே சிதைத்துக் கொன்றுவிடவேண்டும் என்ற சதி நினைப்பில, ஆச்சாரியார் அது பற்றி விளம்பரப் படுத்தும் பணியில் முதல் முதலாகத் தலையிட்டார். அதற்குத் துணையாக, தம்மை எதிர்க்கும் காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களை, இழித்துப் பழித்துத் தூற்றவும் வசை பாடவும் முனைந்துவிட்டார்.

ஆச்சாரியாருக்கு ஆதரவு திரட்டும் 'சோற்றுப் படை' கிளம்பியது! அமைச்சர் அவையிலும் உள்ள இரண்டொன்று ஆச்சாரியார் லட்சார்ச்சனையைத் துவக்கின!

ஆச்சாரியார் அகன்றுவிட்டால், தமிழ் நாட்டில் எரிமலை உண்டாகும் என்றும், மணக்கம்பம் ஏற்பட்டுவிடும் என்றும், சூரியன் தோன்ற மறுத்துவிடுவான் என்றும், அண்ட சராசரங்கள் அனைத்தும் கதிமாறிவிடும் என்றும், அபசகுன பஞ்சாங்கங்கள் அபாண்டம் கூறுவதுபோல, ஆரம்பித்துவிட்டதுகள் அதுகள்! அதுகளின, மானங்கெட்ட மதிப்பில்லாத அர்ச்சனைகளை எழுதுவதற்கு எழுதுவிடாமல் ஆச்சாரியாரின் சுய ஜாதிப் பத்திரிகைகள் பக்தியாகப் பிரசுரித்தன! ஆனால், அப்பொழுதும் ஆச்சாரியாருடையவும், அதுகளின் சொல் அசிங்கங்களைக் கேட்டு ரசித்தவர்கள், ஐயோ பாவம்! போலீஸ் படையினர்தான்!

வெளிப்படையாக நடந்த விவகாரம் இது!

திரை மறைவில், நடந்ததோ ஏராளம்!

தமது பதவி நீடிப்பின் சார்பாக, இதுகள் கட்சி கட்டிப் பேசினதை எல்லாம், அமைச்சர் ஆச்சாரியார் பார்த்துக் கொண்டும், கூடிக் கலந்துகொண்டும், தமது பரமானந்த சீடர்களின் செயற்கரிய காரியங்களுக்கு 'சபாஷ்' கூறிக்கொண்டும்தான் இருந்து வந்தார். 'காங்கிரசுக்குள்ளாகப் பிளவு ஏற்படுத்தாதீர்கள்! முடிவில் தலைவர்கள் ஒற்றுமையாகி விடுவார்கள்! நீங்கள்தான் பிளவுபட்டு நிற்பீர்கள்! ஏமாற்றமடைவீர்கள்!' என்று, தமது முத்தான வாய்திறந்து ஒரு சொல் சொல்ல முன்வரவில்லை, அப்பொழுது, இந்தக் கனம்!

தை பொங்கல்—திராவிடர் திருநாள்

தோழர் நெடுஞ்செழியன் பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைஞர்களுக்காகவும் இலக்கியப் பேராசிரியர்களுக்காகவும், விஞ்ஞானிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டிருந்த (ரிசர்வ்டு) தனி இடத்தில அவர் கோலியப்புறமாக வந்திருக்கலாமா? கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், டி. கே. சண்முகம், சி. வி. ராமன், நாமக்கல்லார் போன்றவர்கள் அமரவேண்டிய இடத்தில், அவர் எப்படி வரலாம்? ஜனநாயகத்தின் குரல் வளையைப் பிடித்து நசுக்கி, ஆட்சி புரிவதற்குப் பெயர்தான் ஜனநாயகமா? 30 ஆண்டு அரசியல் அனுபவம் கூடவா ஆச்சாரியாருக்கு இதை அறிவுறுத்தவில்லை? இதுதான் அவரது நிபுணத்துவமா?"

"முப்பது ஆண்டுகட்கு முன்பு பார்ப்பனரல்லாத கட்சி துவக்கப்பட்ட தினிருந்து, நம்மை, 'ஜாதித் துவேஷிகள்' என தூற்றினர்; நாம் அழிவோம் என எண்ணினர்! மாறாக, நாம் இன்று, தி. மு. கழகமாக வளர்ந்திருக்கிறோம்! 'வகுப்புரிமை' பேசிய காரணத்தினால்தான், 'அவர் ஜாதிவிதிப்படி' மாடு மேய்க்கவேண்டிய சிவசண்முகனார், இன்று சட்டசபையிலே சபாநாயகராக இருக்க முடிகிறது. 200, 300 ஆண்டுகட்கு முன்னே, இந்த நிலை ஏற்பட்டிருக்குமா? எனவே நாம் போக வேண்டிய பாதை மிகப் பெரியது; அதற்கு தோழர் மதியழகன் போன்ற பல லட்சக்கணக்கான இளைஞர்கள் தேவை"

—என்று, 10-12-53ல், குடி, இரு. வி. க. திடலில் (நான்ராண்டித மைதானம்) சிறைமீண்ட தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு நடைபெற்ற வரவேற்பு பொதுக் கூட்டத்தில் பேசுகையில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூறினார்.

தொடர்ந்து, அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

'சென்ற 10 நாட்களுக்கு முன், சிறையிலே தோழர் மதியழகனை விட்டுவந்தோம்; நாங்களும் இன்று அவரை உங்களைப்போல கண்டு, வரவேற்றுப் பூரிப்படைகிறோம்.

தி. மு. கழகம், சென்ற மூன்றாமாத காலமாக என்ன பணியினைச் செய்திருந்தது என்றால், அதன் கொள்கை இதற்கு முன் விழாதார் காதிலும் விழுந்திருக்கிறது. பரியாதார் நெஞ்சுக்கும் புரிந்திருக்கிறது.

"முன்பு, பரபரப்பாகச் சுற்றி, அதன் கொள்கைகளைப் பரப்ப நாங்கள் எவ்வளவு பாடுபட்டோமோ, அதைவிட பன்மடங்கு அதிகமாக அதன் கருத்துகள் இன்று மக்களிடையே அறிமுகமாகியிருக்கிறது. ஆனால், இதைக் கண்டு நாங்கள் பூரிப்படைந்து விடமாட்டோம்.

"கழகம் துவக்கப்பட்ட நாளில் நாம் கேலிக்கும், கண்டனத்துக்கும் ஆளானோம்; என்றாலும் வளர்ந்தோம்; வளருகிறோம்; காரணம் அதன் கொள்கை கொண்டுள்ள உறுதிப்பாடேயாகும்.

'கழகத்தை ஒரு காலத்தில் கவலால அடித்தார்கள்; முடியவில்லை! சொல்லால 'வசை புராணம்' பாடினார்கள்; தீர்த்துக்கட்ட முடியவில்லை! இப்போது சட்டத்தால், ஆணவத்தால், சர்வாதிகாரத்தால வீழ்த்த முயற்சிக்கிறார்கள். நாம் இதனையும் தாண்டி வளர்ந்துள்ளோம்,"

"புதிய கல்வித் திட்டப் போராட்டத்திலே, தி. மு. கழகம் வெற்றிபெற்று விட்டதென்றே கூறுவேன்.

"பருலேகர் குழு முடிவுக்கும், ஆச்சாரியார் ஆரம்பித்த புதிய கல்வித் திட்டத்துக்கும் நிறைய வேறுபாடு உண்டு.

"வர்ணாச்சிரமத் திட்டப்படி— எங்கே நீர் இப்போது எங்கே? தகப்பன் தொழிலைதான் மகன் செய்யவேண்டும்-உம் ஆரம்பத் திட்டப்படி; பருலேகர் குழுவிற்கு இத்திட்டம தரப்பட்டதா? புதிய கல்வித் திட்டம் பற்றி அரசாங்கம் வெளியிட்டுள்ள புத்தகத்திலாவது உண்டா தகப்பன் தொழிலை மகன் செய்யவேண்டுமென்று? என்னைக் கேட்டால், 'படிப்பே வேண்டாம் என்பேன்,' என்றீரே எங்கே போயிற்று உமது வர்ணாச்சிரமக் கல்வித் திட்டம்? ஐதர் படித்தானா அக்பர் படித்தானா, அலெக்சாண்டர் கேட்டா ஆண்டான் என்று 1953 ஜூன், ஜூலையிலே சொன்னீரே — டிசம்பரிலே, எங்கே அந்தப் பேச்சு? ஏதேதோ புதுவழிகள் சொல்லப் படுகிறதே தவிர வருணாசிரம பேச்சு அதிலே இல்லை!

"தி. மு. கழகம் சென்ற மூன்றுமாத காலமாக செய்த பணியின் பயன்தான் ஆச்சாரியார் 'இறங்கி' வந்திருக்கிறார் "நாம் எறும்புகளாம்! கடித்தால், நம்மை நசுக்க வேண்டுமாம். என்ன அர்த்தம் இதற்கு?— இருக்க வேண்டிய மந்திரிகளை கலியாட்டி பொம்மைகளாக்கி அவர்களுடைய கருத்துக்களை பொருட்படுத்தாது தன்னுடைய எண்ணம்போல், தான் நினைத்தபடி பேயாட்டமாட ராஜகோபாலாச்சாரியாருக்கு உரிமை இருக்கிறது என்ற சித்தாந்தத்திற்கும், அரசியலவாதிகளை வெறும் சூன்யங்களாக ஆக்க அவர் செய்யும் வெறி பிடித்த முயற்சிகளை எதிர்க்கும் அரசியல வாதிகளின் சுயமரியாதைக்கும் இடையே நடக்கும் போராட்டமதான் இது."

"தன்னுடைய சர்வாதிகார, எதேச்சதிகார குணங்களைக் குறைத்துக் கொண்டு, ஜனநாயக அமைப்புக்குப் பழகப்பட்டு, பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் பண்பை தெரிந்து கொண்டால் ஒழிய இந்த முதல் மந்திரியின் வண்டி வெகு நாள் ஓடாது."

'பாண்டியனைக் கொலை செய்தீ'; உடையார்பாளையம் வேலாயுதத்தைச் சாய்த்தீ'; இவர்களையும் விடாதீ;' என, பலாத்காரத்தைத் தூண்டுவதைத் தவிர வேறு என்ன போச்சு?"

"ஜாதித் துவேஷமென்ற வெல்லக்கட்டியை வைத்துக் கொண்டு, இந்த எறும்புகள் உலவுகின்றன,' என்று ஆச்சாரியார் குறிப்பிட்டார். நான் ஒப்புக்கொள்கிறேன், இதை! ஜாதித் துவேஷம் என்ற வெல்லத்தை உருவாக்குபவர் நீ— உமது பரம்பரை; எனவே ஜாதித் துவேஷமென்ற வெல்லம்' குறைந்து, மறைந்து போகிற வரையிலே, 'எறும்புகள்' ஊர்ந்து வந்தபடிதானிருக்கும்!

சி. ஆர். வண்டி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போயினர்! பூஜித்தனர்! — — உளம் உடைந்து திரும்பினர்!

புதுடெல்லி, டிச. 10— ஆச்சாரியாரை எதிர்த்து நேருவிடம் புகார் செய்ய புதுடெல்லி சென்ற டி. வி. கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஸி., ஏ. எம். சம்பந்தம் எம். எல். ஏ., என. பஞ்சாட்சரம் செட்டியார் எம். எல். ஏ., ஆகிய மூவரும் நேற்று இங்கு வந்தனர். காங்கிரசப் பொதுச் செயலாளர் பல்வந்தராய் மேத்தாவைச் சந்தித்துப் பேசினர்.

மாலையில பாராளுமன்ற அலுவலகத்தில நேருவைச் சந்தித்துப் பேசினர்.

மாலையில் பாராளுமன்ற அலுவலகத்தில நேருவைச் சுமார் ஒன்றரை மணி நேரம் வரை, சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி விவகாரம்பற்றி விவாதித்தனர். இதன்போது காங்கிரஸ் பொதுச்செயலாளர் மேத்தாவும் உடனிருந்தார்.

நேருவிடம் இம்மூவரும் சென்னையில் தற்போதைய விவகாரம் குறித்த தமது கருத்தை அறிவித்ததாகக் கூறப்படுகிறது.

'இவ்வளவு சிக்கலான விவகாரம் எனக்குத் தெரியாது. இந்த விவகாரம் குறித்து நிதானித்து முடிவு சொல்லுகிறேன்."

என நேரு கூறியதாகத் தெரிகிறது. அதன் குழுவினர் மூவரும் வெளியில் வந்தனர்.

இங்கு வந்த மூவரில பஞ்சாட்சரம் செட்டியார், நேற்று சென்னை வந்து சேர்ந்தார் மற்ற இருவரும் இன்று வருவர்

எம். எல். ஏ., மீது நஷ்ட ஈடு வழக்கு

திருநெல்வேலி, டிச 10— டாக்டர் என. கிருஷ்ணசாமி, கோசல்ராம் எம். எல். ஏ. மீது 1000 ரூபாய் நஷ்டஈடு கோரி தொடர்ந்திருந்த வழக்கில் டாக்டருக்கு கோசல்ராம 10 ரூபாய் நஷ்டஈடாகத் தர வேண்டுமென்று அடிஷனல் ஜில்லா முன்சீப் டிக்ரி செய்து தீர்ப்பளித்தார். இதை எதிர்த்து தோழர் கோசல்ராம் செய்து கொண்ட அப்பீலை அடிஷனல் ஜில்லா ஜட்ஜ் எஸ். வேங்கடசுப்பூதிரி இன்று விசாரித்தார். டாக்டர் கிருஷ்ணசாமி தான் கோரிய ரூபாய் 1000 வேண்டுமென்று எதிர் அப்பீல செய்து கொண்டிருந்தார். இதை அடிஷனல் ஜில்லா ஜட்ஜ் ஏற்றுக்கொண்டு டாக்டருக்கு கோசல்ராம வட்டியுடனும் ரூபாய் 250 நஷ்டஈடு தரவேண்டுமென்று டிக்ரி செய்து உத்தரவிட்டார்.

எமது புதிய வெளியீடுகள்

கருணாநிதியின் கருத்தோவியங்கள்

★

சிறைச் சோலையில் பூத்த மலர்கள்!
திராவிடப் பண்ணை தரும் தேன் விருந்து!!
தமிழன்னைக்குக் கலைஞர் சூட்டும் தங்க மகுடம்!!!

★

★ இரத்தக் கண்ணீர் (நாடகம்) 2—0—0
நாடக வேந்தர் மு. கருணாநிதியின் புதிய கற்பனை. பொன்விழா கண்ட ஆசிரியர் எழுதிய தேவைப்பட்ட தென்னமுதம்.

★ ஆறு மாதக் கடுங்காவல் 2—0—0
திராவிடர் வரலாற்றுக்குத் தனி புரியும் கல்லக்குடிப் போராட்டக் குறிப்புகளும், சிறை வாழ்வின் வர்ணனைகளும் அடங்கிய சித்திரக் கவிதை. கருணாநிதி எழுதியது.

★ முத்தாரம் (கவிதை) 1—0—0
புரட்சி எழுத்தாளர் கருணாவின் பெருமுனை எழுப்பும் புதிய முறை. ஆறு கட்டுரைகளே படிய வழி காணுவோர், இந்த நூலின் மூலம், அறிஞர் உலகும், இளைஞர் உலகும் சுவைத்துப் பயன் காணும் அறிவுச் சோலை.

திராவிடப் பண்ணை,
தெப்பக்குளம் — திருச்சி.

கழகக்கூட்டங்கள்

குமாரபாளையம்

13—12—53 ஞாயிறு மாலை
இடம்: நேதாஜி மைதானம்
தலைவர்: எஸ். முருகையன்
பேச்சாளர்கள்:
தி. பி. சிற்றரசு
எஸ். என். எம். சுப்ரமணியம்
ப. கண்ணன்

★

பொன்மலை—

மேலக்கற்கண்டார்கோட்டை 3-வது ஆண்டு விழா
13—12—53 ஞாயிறு மாலை
இடம்: கழக மைதானம் (மே. க. கோட்டை)
பேசுவோர்:
தோழியர் அருண்மொழி
சிற்றணி-ஏ. சுப்ரமணியம்
எஸ். கேமோகன்

காஞ்சியில்......

12—12—53 சனி இரவு 9 மணிக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை தலைமையில், காஞ்சி கண்ணன் டாக்கீஸில், 'இருளும் ஒளியும்" என்ற நாடகம் நடைபெறும் சிவாஜி-கணேசன், எஸ். வி. சகஸ்ரநாமம், மைனாவதி, ராஜம் ஆகியோர் நாடகத்தில் பங்கேற்பர்.

கொடுங்கையூர் தி. மு. க. துவக்கம்

சென்னையைச் சேர்ந்த கொடுங்கையூரில், 13-12-53 ஞாயிறு காலை 10 மணிக்கு, தி. மு. கழக அமைப்பும், செயற்குழு தேர்தலும், சென்னை மாவட்டச் செயலாளர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். கழக உறுப்பினர்கள் அனைவரும் தேர்தலில் கலந்து கொள்ள வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

குறள் வகுப்பு

புரசை, குறள் நெறிக் கழகச் சார்பாக, புரசை கங்காதீஸ்வரர் கோவில் தெருவில் அமைந்துள்ள கார்ப்பரேஷன் பள்ளியில், 13—12—53 காலை 9 மணிக்கு 'குறள் வகுப்பு' நடைபெறும். ஆசிரியர்: புலவர் சீனிவாசன்.

மதுரையில் கருணாநிதி

★

13—12—53 ஞாயிறு காலை 11 மணிக்கு, தோழர் மு. கருணாநிதி அவர்கள் தூத்துக்குடி எக்ஸ்பிரசில் மதுரை வந்து சேருகிறார். புகைவண்டி நிலையத்தில் அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்படும்.

மாலை 5 மணிக்கு, மதுரை நகர் தி.மு.கழகத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, நான்கு மாசி வீதிகள் சுற்றி, திலகர் திடல் வந்து சேரும். ஊர்வலத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியவர்களும் கலந்துகொள்வார்கள்.

மாலை 6-30 மணிக்கு, திலகர் திடலில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இரா. சந்திரசேகரன், காஞ்சி - கல்யாணசுந்தரம், இளமுருகு பொற்செல்வி ஆகியோர் பேசுவர்.

இரவு 10 மணிக்கு, மதுரை சென்ட்ரல் தியேட்டரில், எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி. சக்ரபாணி குழுவினர் நடிக்கும் 'இன்பக் கனவு' நாடகம், மு. கருணாநிதி தலைமையில் நடைபெறும்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்காக

திராவிட கலா நிகழ்ச்சி

★

13—12—53 ஞாயிறு காலை 9 மணிக்கு சேலம் சித்தேஸ்வரா டாக்கீசில், தோழர் கோபி என். இராசு தலைமையில், கவிஞர் கண்ணதாசன் முன்னிலையில், சிற்றணி ஏ. சுப்ரமணியம் குழுவினரால் கலா நிகழ்ச்சி (புதிய முறையில்) நடைபெறும்.

நன்கொடை கட்டணம் 2 அணா

கைத்தறியுடுத்தி களிப்புறும் நன்னாள்